ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2270/10 - 2022 මාර්තු මස 08 වැනි අඟහරුවාදා - 2022.03.08

2270/10 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 08 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**மோட்டார் போக்குவரத்துத் தொழிலுக்கான சம்பளச் சபை**

மோட்டார் போக்குவரத்துத் தொழிலுக்கான சம்பளச் சபையானது, சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் வாயிலாகத் தனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் தீர்மானங்களை அவ்வட்டவணையிற் கூறப்பட்டுள்ளவாறு மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளதென மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் (136 - ஆம் அத்தியாயம்) 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க இத்தால் அறிவிக்கின்றது.

மேற் கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபணைகள் 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிவரை சபைத் தலைவரினால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஒவ்வோர் ஆட்சேபணையும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபணை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

**பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி,**
தலைவர்,
மோட்டார் போக்குவரத்துத்
தொழிலுக்கான சம்பளச் சபை.

"மெஹெவர பியெச"
தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
2022, மாச்சு 03.

1A - G 36286 — 10 (2022/03)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

*மோட்டார் போக்குவரத்துத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டும் 1947 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதிய 9667 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரமாகிய அறிவித்தலின் அட்டவணையினகத்தே கூறப்பட்டுள்ளனவும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டனவும், 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதிய 2108/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டனவுமான முடிபுகள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தின் 6 ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும் :*

**பகுதி II**

தொழிலாளர் வகுப்பு :

'ஏ' வகுப்புத் தொழிலாளர் :

*22 பிரயாணிகளுக்கு மேல் ஏற்றுவதற்கு உத்தரவு பெற்ற பேருந்துச் சாரதிகள்.*

'பீ' வகுப்புத் தொழிலாளர் :

*22 பிரயாணிகளையும் அதற்குக் குறைந்த தொகைப் பிரயாணிகளையும் ஏற்றுவதற்கு உத்தரவு பெற்ற பேருந்து சாரதிகள், நோயாளர் மோட்டார் வண்டிச் சாரதிகளும், லொறிச் சாரதிகளும், (பெருந்தோட்டம் ஒன்றுக்கு சொந்தமானதாய் அத் தோட்டத்தினுள் மட்டும் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படுபவை தவிர) 20 அந்தருக்கு மேற்பட்ட பாரம் ஏற்றும் உத்தரவு பெற்ற லொறிச் சாரதிகளும், வான் சாரதிகளும்.*

'சீ' வகுப்புத் தொழிலாளர் :

*வாடகைக் கார்கள், கெப்கார்களின் சாரதிகள் 20 அந்தருக்குக் குறைந்த பாரம் ஏற்ற உத்தரவு பெற்ற லொறி, வான் சாரதிகள் (பெருந்தோட்டம் ஒன்றிற்குச் சொந்தமானதாய் அத்தோட்டத்தினுள் போக்குவரத்திற்கு பயன்படுத்தப்படும் லொறிகள் தவிர) வான் சாரதிகள், முச்சக்கர வண்டிச் சாரதிகள் மற்றும் பிரதேமேற்றும் மோட்டார் வண்டிச் சாரதிகள்.*

'டீ' வகுப்புத் தொழிலாளர் :

*பொருட்கள் கொண்டு செல்வதற்கான இழுவை வண்டிகள் கொண்ட இழுபொறிச் சாரதிகள், இழுவை வண்டிகள் கொண்ட லொறிச் சாரதிகள் (சிகாமல் குதிரை வண்டி வகை இழுவை வண்டிகள் கொண்ட லொறிகள் தவிர அல்லது தோட்டத்தினுள் மட்டும் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் இழுபொறிச் சாரதிகள்)*

'ஈ' வகுப்புத் தொழிலாளர் :

*பெருந்தோட்டங்களுக்குச் சொந்தமானதும் தோட்டத்தினுள் மட்டும் பாவிக்கப்படுவதுமான பின்வரும் வாகனங்களின் சாரதிகள், (அ) லொறிகள், (ஆ) இழுவை வண்டிகள் கொண்ட இழுபொறிச் சாரதிகள்.*

'எப்' வகுப்புத் தொழிலாளர் :

*நடத்துநர்கள், எழுதுவினைஞர்கள், காசாளர்கள், சீட்டு எழுதுநர்கள், ஆசனப் பதிவு எழுதுவினைஞர்கள் முதலான பேருந்து வண்டியிற் பணியாற்றுவோர்.*

'ஜீ' வகுப்புத் தொழிலாளர் :

*20 அந்தருக்கு மேற்பட்ட பாரமேற்ற உத்தரவு பெற்ற லொறிகளின் துப்புரவாக்குநரும், சுமையாட்களும்.*

'எச்' வகுப்புத் தொழிலாளர் :

*20 அந்தருக்கும் அதற்குக் குறையவும் பாரமேற்ற உத்தரவுபெற்ற லொறிகளின் துப்புரவு வாக்குநரும் சுமையாட்களும், பேருந்துகள், வாடகை வண்டிகள், கெப்கார்கள், வான்கள், நோயாளர் வண்டிகள், பிரேதமேற்றும் மோட்டார் வண்டிகள்.*

'ஐ' வகுப்புத் தொழிலாளர் :

பேருந்து பரிசோதகர்களும், நேரம் பதியுநரும்.

'ஜே' வகுப்புத் தொழிலாளர் :

பேருந்து பரிசோதகர்களும், பஸ் நிலையக் கண்காணிப்பாளரும்.

'கே' வகுப்புத் தொழிலாளர் :

மோட்டார் போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்ட, மேலே கூறப்பட்டோர் தவிர்ந்த ஏனைய எல்லாத் தொழிலாளர்களும்.

முன் காட்டப்பட்ட முடிபுகள் :

(அ) "சுத்திகரிப்போர்" எனப்படுவோர் (எழுதுவினைஞர் வகையை சாராது) லொறிகள், பேருந்துகள், வாடகைக்கார்கள், கெப்கார்கள், வான்கள், நோயாளர் வண்டிகள் அல்லது பிரேதமேற்றும் மோட்டார் வண்டிகள்

(ஆ) "சுமையாட்கள்" எனப்படுவோர் வேலைக்காக வாகனங்களிலே பிரயாணஞ் செய்ய வேண்டியவர்களான லொறிகள், பேருந்துகள், வான்கள், வாடகைக் கார்கள், கெப்கார்கள், நோயாளர் வண்டிகள் பிரேதமேற்றும் மோட்டார் வண்டிகள் ஆகியவற்றில் சுமைகள் ஏற்றி இறக்குவோர்.

## பகுதி II

ஆகக்குறைந்த மாதச் சம்பள அளவு

| சேவை ஆண்டு | வகுப்பு ஏ, டீ ரூ. ச. | வகுப்பு பீ ரூ. ச. | வகுப்பு சீ ரூ. ச. | வகுப்பு ஈ, எப், ஜே ரூ. ச. | வகுப்பு ஜீ, ஐ ரூ. ச. | வகுப்பு எச் ரூ. ச. | வகுப்பு கே ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|---|
| 01-ஆம் ஆண்டு | 16835.00 | 16310.00 | 15736.00 | 15316.00 | 14840.00 | 14476.00 | 14000.00 |
| 02-ஆம் ஆண்டு | 17035.00 | 16485.00 | 15886.00 | 15441.00 | 14940.00 | 14576.00 | 14100.00 |
| 03-ஆம் ஆண்டு | 17235.00 | 16660.00 | 16036.00 | 15566.00 | 15040.00 | 14676.00 | 14200.00 |
| 04-ஆம் ஆண்டு | 17435.00 | 16835.00 | 16186.00 | 15691.00 | 15140.00 | 14776.00 | 14300.00 |
| 05-ஆம் ஆண்டு | 17635.00 | 17010.00 | 16336.00 | 15816.00 | 15240.00 | 14876.00 | 14400.00 |
| 06-ஆம் ஆண்டு | 17835.00 | 17185.00 | 17486.00 | 15941.00 | 15340.00 | 14976.00 | 14500.00 |
| 07-ஆம் ஆண்டு | 18035.00 | 17360.00 | 16636.00 | 16066.00 | 15440.00 | 15076.00 | 14600.00 |
| 08-ஆம் ஆண்டு | 18235.00 | 17535.00 | 16786.00 | 16191.00 | 15540.00 | 15176.00 | 14700.00 |
| 09-ஆம் ஆண்டு | 18435.00 | 17710.00 | 16936.00 | 16316.00 | 15640.00 | 15276.00 | 14800.00 |
| 10-ஆம் ஆண்டு | 18635.00 | 17885.00 | 17086.00 | 16441.00 | 15740.00 | 15376.00 | 14900.00 |
| 11-ஆம் ஆண்டு | 18835.00 | 18060.00 | 17236.00 | 16566.00 | 15840.00 | 15476.00 | 15000.00 |
| 12-ஆம் ஆண்டு | 19035.00 | 18235.00 | 17386.00 | 16691.00 | 15940.00 | 15576.00 | 15100.00 |
| 13-ஆம் ஆண்டு | 19235.00 | 18410.00 | 17536.00 | 16816.00 | 16040.00 | 15676.00 | 15200.00 |
| 14-ஆம் ஆண்டு | 19435.00 | 18585.00 | 17686.00 | 16941.00 | 16140.00 | 15776.00 | 15300.00 |
| 15-ஆம் ஆண்டு | 19635.00 | 18760.00 | 17836.00 | 17066.00 | 16240.00 | 15876.00 | 15400.00 |

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

*அறிவித்தல்*

**கடல் போக்குவரத்து மற்றும் நடை முறைச் சேவைகள் தொழலுக்கான சம்பளச் சபை.**

*கடல் போக்குவரத்து மற்றும் நடைமுறைச் சேவைகள் தொழிலுக்கான சம்பளச் சபையானது, சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் வாயிலாகத் தனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் தீர்மானங்களை அவ்வட்டவணையிற் கூறப்பட்டுள்ளவாறு மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளதென மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் (136 – ஆம் அத்தியாயம்) 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க இத்தால் அறிவிக்கின்றது.*

*மேற்கூறப்பட்டுள்ள உத்தேசத்திற்கான ஆட்சேபணைகள் 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரைக்கும் சபையின் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.*

*அத்தகைய ஒவ்வோர் ஆட்சேபணையும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபணை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.*

**பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி,**
*தலைவர்,*
*கடல் போக்குவரத்து*
*மற்றும் நடைமுறைச் சேவைகள் தொழிலுக்கான*
*சம்பளச் சபை.*

*"மெஹெவரபியெச"*
*தொழில் திணைக்களம்,*
*கொழும்பு 05,*
*2022, மாச்சு 03.*

**அட்டவணை**

*கடல் போக்குவரத்து மற்றும் நடைமுறைச் சேவைகள் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 2017.05.09 ஆந் திகதி 2018/9 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1556/4 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பினால் கடைசியாக வேறுபடுத்தப் பட்டவையுமான முடிபுகள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தில், ஏற்கனவேயுள்ள பாகத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பாகத்தை இடுவதன் மூலம், மேலும், வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.*

**பகுதி II**

*பயிற்சியற்றோர்*

*வேலை உதவியாளர், கப்பல் வேலையாள் (கப்பலோட்டம், கப்பல்சேராங், குழாய்சேராங், கிறீஸ் பூசுபவர், பொருட்கள் அடுக்குபவர், மணிஅடிப்பவர்/சமிக்ஞையாளர் /கயிறுகட்டுபவர், உதவியாளராகப் பொறுப்பேற்கும்/ஒப்படைக்கும் அலுவலர், பொருட்கள் எடுத்துச் செல்பவர்.*

*இடைநிலை பயிற்சியுடையோர்*

*கப்பல் தளபணியாள், சாரதி (நீரில்), கப்பலோட்டப்பணியாள், கென்ட்றி பாரமுயர்த்தி சமிக்ஞையாளர், அங்கியில்லா சுழியோடி, கப்பல் கருவிகளைக் கையாள்பவர், திட்டமிடல் உதவியாளர் (முனையம்/ கப்பலில்), துறைமேடைப்பணியாளர், பொறுப்பேற்கும் / பொறுப்பளிக்கும் அலுவலர், இயக்க உதவியாளர்.*

*பயிற்சியுடையோர்*

*விஞ்சியாளர், ஹெச் தண்டல், கப்பல் சரக்குக் கையாளல் உபகரணம் இயக்குபவர், பிரிவு உதவிக் கண்காணிப்பாளர், கொள்கலன் கையாளல் உபகரணம் இயக்குபவர் (*QGC/RTG/Fork Lift/Prime Movers/Yard Tracters/ Crane/Oil Pumps*), பொறியியல்*

அலுவலர், இயந்திர அறைநுட்பவியாளர், கடற் சுழியோடி, பல்தேர்ச்சி படகு இயக்குபவர், நங்கூரத்தள ஓவசியர், வெளிச்சவீட்டுப் பொறுப்பாளர், உதவி இயக்குனர், உள்ளக முனையங்களுக்கிடையிலான இணைப்பாளர், டெக்/வாப்பு கட்டுப்பாட்டாளர்கள், முனையகட்டுப்பாட்டாளர்கள், முனைய திட்டமிடுபவர், இயக்கக் கட்டுப்பாட்டாளர், கொச்சன், சாரதி, உதவி டக்கள அதிபர் (டக் மற்றும் லான்சி), போசன், முகாமைத்துவ உதவியாளர் (கையாளல்), சறுக்குவழிக் கட்டுப்பாட்டாளர், கப்பற் கையாளல் கட்டுப்பாட்டாளர் (திட்டமிடல் எழுதுவினைஞர்), கடற்கலப் போக்குவரத்து இணைப்பாளர், பல்தேர்ச்சி தொழில் நுட்பவியலாளர்

*குறிப்பு* :- அலுவலக வேலையாட்கள், பொறியியல் தொழிலில் உள்ள வேலையாட்கள் மற்றும் மோட்டார் போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள் ஏதாவது வேறு கட்டளை அல்லது ஏற்பாடுகளினால் மேவப்படுபவர்கள் கடல் தொழில் போக்குவரத்து மற்றும் அதனைச் செயற்படுத்தும் சேவைகள் தொழிலுக்குரிய சம்பளச் சபையால் மேவப்படமாட்டார்கள். இருந்த போதிலும் நேரடியாக அல்லது மறைமுகமாக அல்லது வேறு எந்த வகையிலேனும் மேலே குறிப்பிட்டுள்ள வேலையாளர் வகைகளில் தொடர்பான வேலைகளைச் செய்யும் ஒவ்வொரு வேலையாளும் சொல்லப்பட்ட சம்பளச் சபையால் மேவப்படுவர்

**ஆகக் குறைந்த மாதாந்த சம்பள அளவு**

| *சேவை ஆண்டு* | *பயிற்சியற்றோர்*<br>*ரூ. ச.* | *இடைநிலைப் பயிற்சி*<br>*ரூ. ச.* | *பயிற்சி பெற்ற*<br>*ரூ. ச.* |
|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 13500.00 | 16875.00 | 23452.00 |
| 2 ஆம் ஆண்டு | 13600.00 | 17075.00 | 23675.00 |
| 3 ஆம் ஆண்டு | 13800.00 | 17275.00 | 23925.00 |
| 4 ஆம் ஆண்டு | 13950.00 | 17475.00 | 24175.00 |
| 5 ஆம் ஆண்டு | 14100.00 | 17675.00 | 24425.00 |

EOG 03 - 0782/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.